
# குருதேவர்

[உறுப்பினர்களுக்கு மட்டும்]    அறிக்கை எண்: 30

'தமிழ் மொழி'' அருளுலக பொருளுலக அறிவியலில் முழுமையான வளர்ச்சி பெற்ற ஒரே மொழி''

—ஞாலகுரு சித்தர் கருவூரர்.



ஞாலகுரு சித்தர் கருவூரர்

குருதேவர், 12 வது பதினெண் சித்தர் பீடாதிபதி, குவலய குரு பீடம், இந்து மதத்தந்தை. அருளாட்சி நாயகம், ஞானச்சாரியார், ஞாலகுரு சித்தர் கருவூரர்

காயந்திரி மந்தரம், மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்தரீகர். முதலியவையே மெய்யான இந்து மதத்தின் வரலாற்றையும் பேராற்றலை யும்; தமிழின் அருளாற்றலையும் விளக்குகின்றன. குருபாரம்பரிய மரபுகளையும் கடந்து அனைவர்க்கும் காயந்திரி மந்தரம் அறிவிக்கப்பட்டது போல்; இதில் காயந்திரி மந்திரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

காணிக்கை: ரூ 1-00    வெளியீடு: 26—6—86

# நமது நாயகம் — 3

## —திருவண நிர்வாகக் குழு

எனவே, மதத்தலைவர்களாக இளைய தலைமுறையினரைத் தயாரிக்க வேண்டும் நமது மதத் தொடர்பான அனைத்துவகைச் செய்திகளையும், இலக்கியங்களையும், பிற வற்றையும் காலக் கணக்கீட்டு அடிப்படையில் [with a chronalogical approach attitude and backing......] தெளிவாகவும், விளக்கமாகவும் கற்பிக்க வேண்டும்...... இதற்குரிய நூல்கள் மீண்டும் மீண்டும் எளிய நடையில்; புதிய புதிய வடிவில் நூல்களை எழுதவேண்டும். பல்வேறு பாடல், ஆடல், கூத்து. நாட்டியம், நாடகம், கதை காதை கவிதை. கீதை .... முதலிய வடிவங்களில் அனைத்தையும் வெளியீட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இவற்றிற்காகப் பயிற்சிப்பள்ளிகள், குருகுலங்கள் கல்விச்சாலை கள் உருவாக்க வேண்டும். சாதாரண உலகியல் வாழ்வை ஏற்கப் போகும் சிறுவர் சிறுமியர் கூட மதக் கல்வியை (Religion Education) கற்க வேண்டும் அதுதான் நேர்மை, நீதி, வீரம, ஒற்றுமை. பற்று, பாசம், கட்டுக்கோப்பு, அன்பு, ஈவு. இரக்கம் தோழமை, நட்பு. கடமையுணர்வு, பொறுப்புணர்வு, பொறுமை...... முதலிய பண்பு கள் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்தேயிருக்கும் இந்து மறுமலர்ச்சித் திட்டங் கள் செயலும், வடிவும், வரழ்வும், உய்வும், உயர்வும பெற்றிடும்! பெற்றிடும்! பெற்றிடும்!

இந்துமதக் கல்வியின் பெயரால் பிறமண்ணினரான பிருமணரின் வட ஆரிய வேதமதமான ஹிந்து மதம் மறுவாழ்வு பெற்றுவிடக்கூடாது எச்சரிக்கை இந்துமதம் தான மறுமலர்ச்சி பெற வேண்டும். அதற்குரிய வண்ணம் தமிழ் மொழியிலுள்ள இந்துமதம் தொடர்பான அனைத்து வகை இலக்கியங்களையும் அச்சிட வேண்டும் அச்சிட்டவைகளையும், அச்சிடக் கூடாதவைகளையும் கற்றுத் தரக்கூட இளைஞர்களை யும் அனைத்து வகையான கல்வி நிலையங்களையும் உருவாக்க வேண்டும் முகம்மதியர் கள் தங்களின் சிறுஅர்களையும், இளைஞர்களையும் மதக்கல்வி கற்குமாறு செய்வதில் பேரார்வம் காட்டுவது போலவே இந்துக்களும் தங்களின் குழந்தைகளை மதக்கல்வி கற்குமாறு செய்ய வேண்டும்.

அப்பொழுதுதான் தன்னம்பிக்கை, இனமானம், தன்மானம் இனப்பற்று, மொழிப்பற்று நாட்டுப்பற்று முதலியவை ஊற்றெடுக்கும் வீரமுள்ள, ஈரமுள்ள, தீரமுளள, உரமுள்ள, தரமுள்ள வருங்காலம் சந்ததி உருவாகிடும்! உருவாகிடும! உருவாகிடும்! எனவே, வருங்காலத்தையாவது இருண்டதாக ஆக்கிடாமலிருக்க ஆபாசக் கலைகளிடமிருந்து மோசடியான அரசியல் நிலைகளிடமிருந் தும ஏமாற்றுக்காரப் சமுதாய வலைகளிலிருந்தும் இன்றை இளந் தலைமுறையைக் காத்திடப் பதினெண்சித்தர்கள் தமிழ மொழியில் படைத்த இநது மதத்தை மருந்தாகவும விருந்தாக்வும் வழங்கும் பணி துவங்கட்டும! துவங்கடடும்! துவங்கடடும்!

---

தொடர்பு:- தலைமைப் பொறுப்பாளர், சி. கவிக்குமார் B.Sc ,
56, N.G.O. காலனி, பொன்னேரி-601204

# குருநிலையும் ஒன்பது கோள் நிலையும் - 1

'விண்ணியல்' (The Universe = அண்ட பேரண்டம்;—> எல்லையற்றுப் பரந்து கிடக்கும் ஒன்று) என்பது; (108) நூற்றெட்டுத் திருப்பதி அண்டங்களையும்; (243) இருநூற்று நாற்பத்து மூன்று சத்தி அண்டங்களையும்; (1008) ஆயிரத்தெட்டுச் சீவ (சிவ) அண்டங்களையும்; இவை மிதக்கும் பெருவெளிப் பரப்பையும்; உயிரிணுப் பெருங்கடல் சூழ்ந்த [108+243+1008=1359] ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தொன்பது அண்டங்களின் இயக்கம்; பயிரின உயிரின நிலைகள்.......முதலியவைகளை விளக்கும் விஞ்ஞானமாகும் [The Cosmic Science]

'வானியல்' [The world = உலகம்] என்பது; இந்த உலகம், இந்த உலகின் இயக்கம்; இயக்கத்தின் மூலங்களான இருபத்தேழு விண்மீன்கள் [The Twenty Seven Stars], பன்னிரண்டு இராசிகள் [The Zodiacs], ஒன்பது கோள்கள் [The Nine Planet$] ஆகிய நாற்பத்தெட்டின் இயக்க நிலைகள் ஆற்றல் நிலைகள்; ...... முதலியவைகளை விளக்கும் விஞ்ஞானமாகும் [The Astronomy].

ஐந்தரம்', 'ஐந்திரம்', 'ஐந்திறம்', எனும் மூன்று வகையான நுட்பமான விஞ்ஞானங்கள் விண்ணியலும் [The Cosmic Science], வானியலும் [The Astronomy பற்றி விளக்குகின்றன. இவைதான், பதினெண் சித்தர்களின் மிகமிக நுட்ப திட்ப ஒட்பப் பகுத்தறிவுப் போக்குகளுக்கும்; அறிவியல் சாதனைகளுக்கும், விஞ்ஞானக் கொள்கைகளுக்கும சான்றாகின்றன, ஊன்றுகின்றன. இவற்றினடிப்படையில் தான் மெய்யான இந்து மதம் உருவாக்கப்பட்டுள்ளது. —ஆனால், பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வட ஆரியர்கள்; மேற்படி மூன்றையும் சேர்த்துச் சுருக்கமான ஓர் அமைப்பைத் தங்களுக்குத் தெரிந்த சித்தர்கள்[48 வகையினர்]மூலம் உருவாக்கித் தரப் பெற்றிட்டனர். அதுவே பஞ்சாங்கம எனப்படும். இதனடிப்படையில் பயனற்ற சடங்குகள், சாத்திரங்கள், சம்பிறதாயங்கள், புராண இதிகாசங்கள்..... முதலியவை -களை உருவாக்கி மெய்யான இந்து மதத்தைச் சிதைக்கவும், சீரழிக்கவும், மெலிவும், நலிவும், முடக்கமும், தேக்கமும்.........அடையச்செய்திட்டனர் பிருமணர்கள்

குறிப்பு: (a) இந்த 'விண்ணியல், 'வானியல்' பேருண்மைகள்தான இப்போது மெய்யான இந்துமதத்தைப் பிருமணரின் கற்பனையான, பயனற்ற பொய்யான ஹிந்து மதத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன

(b) பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதம் அண்ட பேரண்டம் முழுவதும் பரவிய; ஆட்சி பெற்றுள்ள ஒன்று என்ற பேருண்மை மேற்படி மூன்று விஞ்ஞானங்களால் விளங்குகின்றன

வானிலுள்ள ஒன்பது கோள்களுந்தான் இம் மண்ணிலுள்ள பயிரினங்களையும், உயிரினங்களையும், [The Floura and the Fauna] நேரடியாக ஆளுகின்றன.

அதாவது,

1 ஞாயிறு (சூரியன் - Sun)
2. திங்கள் (சந்திரன் - Moon or Lunar)
3 செவ்வாய் (அங்காரகன் - Mar$)
4. புதன் (Mercury)
5. வியாழன் (குரு - Jupitor)
6. வெள்ளி (சுக்கிரன் - Veuus)
7. சனி (Saturn)
8 இராகு (Dragon's tail)
9. கேது (Dragon's Head)

(தொடரும்)

# அன்புள்ள சேவுகனுக்கு...........!

## நமது வளவளர்ச்சியும், செயல் நிலையும்

அன்புச் சேவுக!

நாம் எதிர்பார்த்ததைவிட மிகச் சிறந்த வளர்ச்சியினைத் தமிழ் நாடெங்கும் பெற்றிருக்கிறோம். நமது இயக்க நேரடி உறுப்பினர்கள் வெளி மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் நன்கு பரவியிருக்கின்றனர். நம்மிடையே கொள்கைத் தெளிவும் குறிக்கோள் பிடிப்பும் உடையவர்கள் எண்ணிக்கையில் நூறின் மடங்குகளாகிவிட்டார்கள் நம்மைச் சார்ந்தவர்களின் நிகழ்ச்சிகளில் பத்தின் பலமடங்கினர் இயக்கத்தவர்களாகவே கூடுகின்ற நிலையும் வளர்ந்திட்டது. நமது அ.வி.தி செயல்வீரர்களின் சுற்றுப்பயணங்கள் மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்று வருகின்றன. சற்றும் எதிர்பாராத வகையில் நம்மவர்களில் தயங்கியும், மயங்கியும், தேங்கியும, நாணியும் ஒதுங்கியிருந்தவர்கள் கூட எத்தகையத் தியாகத்தையும் செய்யத் தயாராகிவிட்டார்கள் நாடெங்கும் அ.வி.தி. நிலையங்கள் செயல்பட்டு மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கும் பணியும் வளமுற்றுவிட்டது. நமது அ.வி.தி செயல் வீரர்கள் நடமாடும் அ.வி.தி நிலையங்களாக மாறியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து நமது வளர்ச்சி வளமான, வலிமையான, வளர்ச்சிதான் என்று எண்ணி பெருமைப்படவேண்டும் நாம்.

ஆர்வமிக்க, பொறுமைமிகு இனிய நண்ப! நமது வளவளர்ச்சி வலிவும் பொலிவும், பெற்றிருந்தாலும் அதனுடைய செயல்நிலை முறையும், நிறையும் (A Systamatic Order and a Perfect functioning) பெற்றுத் திகழவில்லை அதாவது நமது செயல் நிலைகள் புதிய புதிய நிறுவனக்கட்டமைப்புக்களையும், தலைமையின் செயல் திட்டங்களின்படி இயங்குகின்ற நிர்வாக ஒழுங்கினையும் பெற்றிடவில்லை என்பது வருத்தத்தோடு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதாவது இன்றைய நிலையில் பல இலட்சம மக்களுக்கு மேல் நம்மையும், நமது இயக்கங்களையும், நமது கருகுலம் குருகுலம், திருகுலம் போன்ற நிறுவனங்களையும் நன்கு தெரிந்து புரிந்து வைத்திருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பேரார்வத்துடன் நமக்கு பேராதரவை வழங்குபவர்களாகவே இருக்கிறார்கள் இப்படிப்பட்டவர்கள் பெரிய பெரிய நகரங்கள் முதல் சின்னஞ்சிறு கிராமங்கள், பட்டிதொட்டிகள், களத்துவீடுகள். ......... முதலிய எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறார்கள் ஆனால் இவர்களையெல்லாம ஒன்று திரட்டி இயக்கமாக இயங்கச் செய்யும் முறைகள்தான் அதாவது செயல்நிலைகள் தான் வளவளர்ச்சிபெறவில்லை, வலிவு பெறவில்லை, பொலிவு பெறவில்லை, இப்பேருண்மையினைப் புரிந்தும் புரிய வைத்தும் செயல்படப் புறப்பட்டேயாக வேண்டும் நம்மவர்கள் இதற்காகப் பேரன்பு கூர்ந்து தாங்கள் பலருக்கும் அஞ்சல் அனுப்புங்கள். சென்னையில் இ.ம.இ பயிற்சிமன்றமபல செயல்திட்டங்களை உருவாக்கிச்செயல்படுவதுபோல் அ.வி.தி தலைமைச் செயலகமான குருகுலத்திலும் பல செயல்திட்டங்களை உருவாக்கியே தீரவேண்டும்

இ.ம.இ.யின் மக்கள் தொடர்பு அமைப்பாக அ.வி.தி தான் பேராற்றலுடன் இருக்கிறது. இதற்காக குருகுலத்தில் மாதந்தோறும் நடக்கும் பருவபூசையை அடிப்படையாக கொண்டு மக்களுக்கு அநுபவப் பூர்வமாக, உணர்வுப் பூர்வமாக நமது

மெய்யான இந்துமதத்தை வழங்கும் பணி நிகழ்ந்திடல் வேண்டும் அதாவது 'மெய்யான இந்துமத உணர்ச்சி!, மெய்யான இந்துமத வளவளர்ச்சி!, மெய்யான இந்து மத ஆட்சிமீட்சி!, மெய்யான இந்துக்கள் எனப்படும் மதவாதிகளிடையே ஒற்றுமையுணர்ச்சியின் எழிச்சி!, மத வேறுபாடில்லாமல் மெய்யான இந்துக்கள் உலக அருளாளர்களை வழிபட்டுப் பயனடையும் மத ஒருமைப்பாட்டுணர்ச்சியின் கிளர்ச்சி வளர்ச்சி!, படிப்பறிவில்லாத பாமரர்களும் மதத் தத்துவங்களையும், மதப் பெரியார்களின் வரலாறுகளையும், தெரிந்து கொள்ளுமாறு செய்யும் கருத்துப் புரட்சியின் செழிச்சி!, எழுதப்படிக்கத் தெரிந்த மக்களிடையே தமிழ் மொழிதான் அருளுலக ஆட்சி மொழி என்ற பேருண்மை விளங்கச் செய்யும் தமிழின விடுதலைப்புரட்சி முயற்சியின் மறுமலர்ச்சி!, அனைத்து வகையான கலைத் துறைகளிலும் தமிழ்ப்பண்பாட்டு மறுமலர்ச்சி விளைவதற்குரிய இலக்கியப்புரட்சி! ...' முதலியவைகள் உருவாவதற்குரிய பயிற்சிகளை வழங்கும் முயற்சிகள் நம்மவர்களால் விரைந்தும் விரிந்தும் மேற்கொள்ளப்பட்டேயாக வேண்டும். இதற்காக நாம் சாதி மத வேறுபாடுகளையெல்லாம் கடந்து அனைவரையும் அருளை அநுபவப் பொருளாக பெற்று நன்மையடையும்படி அழைப்பு விடுக்கவேண்டும். இந்த அழைப்பின் அடிப்படையில் நாம் செலவழிக்கப் போகும் உழைப்பின் அளவைப் பொறுத்துத்தான் நமது விரிந்த, விரைந்த வளவளர்ச்சியினை வடிவமைப்புச் செய்ய முடியும்.

அடக்கத்திலும் அமைதியிலும் அரும்பணியாற்றிடும் சீரிய நண்ப! தாங்கள் எங்குமுள்ள நமது இயக்கத்தவர்களுடனும் நிறுவனங்களைச் சார்ந்தவர்களுடனும் தொடர்ந்து கடலலை போலத் தொடர்பு கொண்டு அவரவர் அவரவருடைய அறிமுக வட்டாரங்களுக்குட்பட்ட மக்களிடமிருந்து தெளிவான முகவரிகளைப் பெற்று மாதாமாதம் ரூபாய் இரண்டு பெற்று பருவ பூசைக்காக அனுப்புமாறு ஏற்பாடு செய்யுங்கள். இதில் ரூபாய் ஒன்று இ ம இ. பயிற்சி மன்ற உறுப்பினர் தொகையாகவும், 50 காசு பருவபூசைச் செலவுக்காகவும், 50 காசு அருளூறு யாகச் சாம்பலை அனுப்பும் அஞ்சல் செலவாகவும் பயன்படுத்திக்கொள்ளப்படல் வேண்டும், பருவ பூசைக்காக ஒதுக்கப்படும் 50 காசை ஒரே நாளில் (பருவ பூசைநாளில்) ஆடம்பரமாகவோ, ஆரவாரமாகவோ, அளவுக்கதிகமாகவோ செலவிட்டு விடக்கூடாது. அதாவது மாதம் முழுவதும் நிகழ்கின்ற குருகுலப் பூசைகளுக்கு இந்தப் பருவ பூசை வசூலைத் திட்டமிட்டு செலவழிக்கவேண்டும். அப்போதுதான் இ.ம இ. பயிற்சி மன்ற நிறுவனமும் அ.வி.தி. நிறுவனமும் இணைந்து வலிவோடும், பொலிவோடும், செயல்படமுடியும். இதற்காக நமது அ.வி.தி. நிறுவனங்களுக்கு வரும் மக்களிடம் அனைத்து வகையான நலிவுகளுக்கும் மெலிவுகளுக்கும், பாதிப்புக்களுக்கும் பரிகாரமாக மாதாமாதம் குருகுலத்தில் நடக்கும் பருவ பூசையிலிருந்து அருளூறு யாகச்சாம்பலைப் பெறுவதற்காக ரூபாய் இரண்டு காணிக்கையாகப் பெறும் திட்டத்தைச் செயலாக்குமாறு வேண்டுகோள் அனுப்புங்கள் இதுபோல் நமது அனைத்து அ.வி.தி செயல் வீரர்களுக்கும் அறிவிப்பு வேண்டுகோள் அனுப்புங்கள் நமது குருகுலத்திற்கு வந்து செல்பவர்களிடம் நமது இந்தச் செயல்திட்டத்தை விளக்கிக் கூறுங்கள்.

எத்தகைய ஏழை, எளிய பாட்டாளிப் பாமரர்களாக இருந்தாலும் உடல் நோய்க்கு மருந்து வாங்குவதற்குச் செலவழிப்பது போல அல்லது உள்ளத்திற்கு விருந்திற்காக திரைப்படம் போன்ற பொழுதுபோக்கிற்குச் செலவழிப்பது போல அருட்சத்தியினை தங்களது வாழ்விற்கு மருந்தாகவும், விருந்தாகவும் பெற மாதத்திற்கு ரூபாய் இரண்டு செலவழிப்பது மிகமிகச் சாதாரணமான சுலபமான செயலாகும். இத்திட்டத்தின்படி சேருகின்ற மக்களனைவரையும் வரிசைஎண் கொடுத்து (Serial No) பேரேட்டில் எழுதுங்கள் மாதாமாதம் 1 + 2 = 3 நகல் எழுதி, அதாவது புதியதாகச் சேருபவர்களின் பெயர் எழுதி, முழுமுகவரியையும் எழுதி, பழையவர்களின் வரிசை எண்ணையும் பெயரையும் எழுதி; தலைவர், பொறுப்பாளர், நிறுவனக் குழு மூவருக்கும் அனுப்புங்கள் குருவாணை.

—குவலய குருபீடம் ஞாலகுரு சித்தர் கருவூரார்

# அமாவாசை விரதமும் சுடுகாட்டுப் பூசையும் - 4

உடனடியாக மக்களிடையில் சுடுகாட்டின் மேலும் புதைகாட்டின் மேலும் உள்ள அச்சகூச்ச ஆச்சரிய மாச்சரிய உணர்வுகளைத் தடுக்கவும், அகற்றவும் முற்படவேண்டும்! முற்படவேண்டும்! முற்படவேண்டும்! இதற்காக வாரத்தின் ஏழு நாட்களிலும், காலையிலோ, அல்லது உருமவேளையிலோ (அ) மாலையிலோ அல்லது முன் இரவிலோ அல்லது நள்ளிரவிலோ எல்லா ஊர்களிலுமுள்ள சுடுகாடுகளிலும் புதைகாடுகளிலும் அவரவர் வசதிக்கேற்பப் பதினெண்சித்தர் நெறிப்படி படையலிட்டுப் பூசை செய்து அருளை அநுபவப் பொருளாகப் பெறுகின்ற நிகழ்ச்சிகள் விரிந்தும் விரைந்தும் நிகழுமாறு செய்யவேண்டும்.

அமாவாசை விரதப்பூசையில் மரக்கறிஉணவு முறை (Vegitarianism) தான் பின்பற்றப்பட வேண்டும் என்ற ஓர் தவறான கருத்து பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியரால் புகுத்தப்பட்டுவிட்டது இக்கருத்து முறையற்றது தவறானது, பயனற்றது, தற்கொலைக்குச் சமமானது, மெய்யான இந்து மதத்தைச் செயலிழக்கச் செய்வது ... என்ற பேருண்மைகளை நம்மவர்கள் நன்கு தெரிந்து, ஆராய்ந்து, அறிந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி, விரும்பி, ஏற்றுச்செயலாக்கும் நல்ல சூழ்நிலையை நாடு தழுவி உருவாக்கினால் தான் பொய்யான ஹிந்து மதத்தின் ஆட்சி நிலைகள் ஒழிந்து மெய்யான இந்து மதத்தின் ஆட்சி மீட்சி நிலைகள் விழிச்சியும், எழிச்சியும் பெறும்! பெறும்! பெறும்! அதாவது பதினெண்சித்தர்களின் பூசா விதிப்படி குருதிப் பலியும் இறைச்சியுணவும் அவிர்ப்பலியும் கையாளப்பட்டிட்டால்தான் அருளை அநுபவப் பொருளாக அடைய முடியும்! அடைய முடியும்! அடைய முடியும்! என்பதே பேருண்மையாகும் இந்தப் பேருண்மை தான் மெய்யான இந்து மதத்துக்கும் பொய்யான ஹிந்து மதத்திற்கும் உள்ள வேற்றுமைகளையும், வேறுபாடுகளையும், முரண்பாடுகளையும் மிகத் தெளிவாக, அநுபவப்பூர்வமாக உணர்த்துகின்றது. எனவேதான் 'இறைமையும் இறைச்சியும்' என்ற தலைப்பில் பல கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன எனவே அமாவாசை விரதத்தன்று வீட்டிலோ அல்லது சுடுகாட்டிலோ அல்லது புதைகாட்டிலோ செய்யப்படுகின்ற பூசைகளில் குருதிப்பலியும், இறைச்சியுணவும் கட்டாயம் இருக்கவேண்டும்.

அதாவது, அமாவாசை விரதமென்றால் கட்டாயமாக அவசியமாக முதன்மையாக எல்லோரும் இறைச்சியுணவு உண்ணவேண்டும்! உண்ணவேண்டும்! உண்ணவேண்டும்! அப்போதுதான் அமாவாசை விரதத்தின் பயனை அடையமுடியும்! அடையமுடியும்! அடையமுடியும்! இப்பேருண்மையினை யாரும் அருவெறுக்கத்தக்கதாக நினைக்கத்தேவையில்லை. ஏனெனில் இப்பேருண்மைதான் அருளை அநுபவப் பொருளாக வழங்கக்கூடிய மெய்யான இந்துமதத்தில் உயிர்நாடியானது. இதனை அமாவாசை விரதம் செய்பவர்கள் அல்லது இருப்பவர்கள் அநுபவப்பூர்வமாக உணரலாம்! உணரலாம்! உணரலாம்!

குறிப்பு: (a) இந்தக் கட்டுரையக் கண்டதிலிருந்தாவது அல்லது கேட்டதிலிருந்தாவது அமாவாசை விரதம் இருப்பவர்கள் தங்களது பூசைகளில் குருதிப் பலியையும் இறைச்சியுணவுப் படையலையும் கையாண்டு இறைச்சியுணவை உண்ணவேண்டும். அப்படிச் செய்வதின் மூலம் இவர்கள் இதுவரை பெற்றிடாத பல அரிய பெரிய சீரிய அருளுலக அநுபவங்களைப் பெற்றிடுவார்கள்.

(b) அதாவது, இனிமேலாவது அருளை அநுபவப் பொருளாகப் பெற விரும்புகிறவர்கள் அன்றாடமோ அல்லது அடிக்கடியோ அல்லது அமாவாசை விரத நாட்களிலாவது தங்கள் தங்களின் குலத்தார்களுக்கும், இனத்தார்களுக்கும், குடும்பத்தார்களுக்கும் பாரம்பரியமாக உள்ள புதைகாடுகளிலும் சுடுகாடுகளிலும் இடுகாடுகளிலும்....... பதினெண் சித்தர்களின் முறைப்படி அதாவது மெய்யான இந்துமத நெறிப்படி நிறைவானப் பூசைகளைச் செய்யவேண்டும் இப் பூசைகளால் இவர்கள் விரிந்தும் விரைந்தும் பயனுள்ள கொழுமையான வளர்ச்சிகளைப் பத்திநிலைகளிலும் சத்திநிலைகளிலும், முத்திநிலைகளிலும் அடையலாம், அடையலாம், அடையலாம்,

இ ம இ யின் வளர்ச்சிக்காக கருவூரர் வழிவந்த கண்டப்பக்கோட்டைச் சித்தர் ஏனனம்-பட்டியார் உ இராமசாமிப்பிள்ளை அவர்கள் எழுதிய எண்ணற்ற கட்டுரைகளில் இதுவும் ஒன்று இந்தக் கட்டுரையை மெய்யான இந்துமத மறுமலர்ச்சிக்கு பேருதவிப் புரியக் கூடியப் பேரிலக்கியமாக கருதி வெளியிடுகிறோம்.

(முற்றும்)

# மதுரை மாமூதூர் மீனாட்சியம்மன் ஆலயம் - 3

அருளாட்சியின் அருட் பேரரசாக குறிப்பிட்ட நான்கு யுகங்களுக்குள் நாற்பத்தெட்டுவகைப் பீடாதிபதிகள் தோன்றுவார்கள். இவர்களின் அருளாட்சிக்குப்பிறகே அந்த உலகம் அனைத்து வகையான நிலைகளிலும், இயக்கங்களிலும் படிப்படியாகத் தேய்ந்து, ஓய்ந்து மாய்ந்திடும்.

மேற்படி அருட் பேரரசு துவங்குவது முக்கோணப்பீடமாக சத்தி ஆலயங்களை அமைக்கப்பட்டேயாகும். இந்தச்சத்தி ஆலயங்கள் மூன்றும் புதிதாகத் தோன்றும் உலகின் நிலப்பரப்பின் மூன்று எல்லைகளாக இருக்கும இதன்படி இம மண்ணுலகில் கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டமெனும் குமரிக்கண்டத்தின் மூன்று எல்லைமையங்களில் ஆலவாய் மாமூதூர் மதுரையெனும் நகரங்கள் படைக்கப்பட்டு அதில் மீனாட்சியம்மன் எனப்படும் சத்திபீடங்கள் அமைக்கப்பட்டே அருளாட்சி துவக்கப்பட்டது. அப்படித்துவக்கப்பட்ட மூன்று சத்திபீடங்களுள் ஒன்று தான் இன்றுள்ள வைகையாற்றங்கரை ஆலவாய் மாமூதூர் மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் இத்துடன் விரிவஞ்சி இந்தக்கட்டுரை நிறைவு செய்யப்படுகிறது அளப்பரிய ஆர்வமோ, அக்கறையோ உள்ளவர்கள் அண்ட பேரண்டங்கள் பற்றியோ ஆவி, ஆன்மா, ஆருயிர் பற்றியோ, உலகமொழி வரலாறு, இனவரலாறு, பண்பாடு வாலாறு நாகரிக வரலாறு......முதலியவைகளைத் தெரிந்து கொள்ள விரும்பினால் நேரில் தொடர்பு கொள்ளலாம்.

—ஞாலகுரு சித்தர் கருவூரார்.

---



# எத்தனை ஐயப்பன்கள் - 6

## இந்து மதத்தந்தை

இந்து மதத்தின் இறவாத்தன்மைக்குக் காரணமாக இருக்கின்ற முப்பத்திரண்டு வகை அருளாளர்களில் ஒருவரே ஐயனார் [ஐயப்பன்] இம்மண்ணுலகில் கடந்த நான்கு யுகங்களுக்கும் உரிய 4373087 ஆண்டுகளுக்குமுரிய நெடிய பெரிய கால இடைவெளியில் ஆயிரமயிரம் ஐயனார்கள் தோன்றியுள்ளார்கள். இவர்களில், 1. பாலகர்கள், 2 சிறுஅர்கள், 3 இளைஞர்கள், 4 ஆட்கள் (நடுத்தரவயதினர்), 5. பெரியவர்கள். 6. முதியவர்கள் 7. கிழவர்கள் என்று ஆணுக்குரிய ஏழுவருவத்தினர்களும்; பெண்களுக்குரிய 1. பேதை, 2 பெதும்பை, 3 மஞ்ஞை, 4. மடந்தை, 5. அறிவை, 6. தெரிவை, 7. பேரிளம் பெண் என்று பெண்ணுக்குரிய ஏழு பருவத்தினர்களும் உள்ளனர்

[தொடர்ச்சி 10 ஆம் பாக்கம்]

# சித்தர் ராமாயணம் - 2

இராவணன் தன் மகள் சீதையை அன்றாடம் அசோகவனத்திற்கு வந்து கண்டு மகிழ்ந்து சென்றான். அவளைத் தான் வளர்க்காமல் குழந்தையிலேயே கடலில் விட்டுவிட்டதற்காக அடிக்கடி வருத்தம் தெரிவித்து சீதைக்கு தன் மீதும் தன் மனைவி மீதும் மிகுந்த பற்றும் பாசமும் மதிப்பும் ஏற்படச் செய்தான். தன் சீதையின் மன நிறைவிற்காக அசோகவனத்தில் ஏராளமான புள்ளிமான்களும், மயில்களும், புறாக்களும், முயல்களும், பாடும் பறவைகளும் உலகெங்குமிருந்து வரவழைத்து அசோகவனத்தை மிகச்சிறந்த இன்பப் பொழுது போக்குச் சோலையாக மாற்றித் தந்தான் தன்மகள் சீதையை அன்புமழையால் நீராட்டினான். ஆனால் சூர்ப்பணகை கோபம் தணிவதற்கு முன்னால் அசோகவனத்திலிருக்கும் சீதை தன்னுடைய மகள் தான் என்ற பேருண்மை வெளிப்பட்டு விடக்கூடாது என்பதற்காக மிகவும் சிரமப்பட்டான் சீதை தன்னுடைய தாயையும் தம்பிகளையும் பார்க்க வேண்டும் என்று துடியாய்த் துடித்த போதும் இராவணன் மிகப்பெரிய அழிவு சூர்ப்பணகையால் விளைந்துவிடும் என்று அஞ்சியே சீதையைச் சிறிது காலத்திற்குப் பொறுமையாக இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான்.

ஆனால் சீதையோ திரிசடையை அடிக்கடி இராவணேசுவரனின் மாளிகைக்கு அனுப்பி தன் தாயைப்பற்றியும்; தம்பிகளைப் பற்றியும் செய்திகளைச் சேகரித்து மகிழ்வாள். தன்னுடைய தாய் வண்டமர்குழலி ஏழிசைவல்லியாகத் திகழ்ந்ததையும் சிவபூசை செய்வதில் மிகச் சிறந்த அருட்செல்வி -யாக விளங்கினாள் என்பதையும் கேட்டுக் கேட்டு நினைத்து நினைத்துப் பூரித்துப் பெருமிதப்பட்டாள். சீதையை அசோகவனத்தைத் தாண்டி எங்கும் செல்லக்கூடாது என்று இராவணன் கண்டிப்பான வேண்டுகோள் விடுத்திருந்தால்தான் சீதை தன்னுடைய ஆசைகளையெல்லாம் அடக்கிக் கொண்டு அசோகவனத்திற்குள்ளேயே கூண்டுப்பறவைபோல் வாழ்ந்தாள். பலமுறை சீதை தன்கணவனுக்குத் தூதனுப்பக் கூறிய போதும், இராவணேசுவரன் 'சூர்ப்பனகையின் கோபம் தணியட்டும்' என்றுபதில் கூறினான். அதனால்தான் அனுமன் நேரில் வந்து சீதையிடம் இராமனைப் பற்றிக் கூறிய போதும் சீதை அனுமனோடு செல்ல விரும்பாமல் இராமனைத் தன்னுடைய தாய் வீட்டிற்குத் தேடி வருமாறு செய்தியனுப்பினாள். அனுமனும் வண்டமர்குழலிக்கும் சீதைக்கும் உருவ அமைப்பில் இருந்த ஒற்றுமையைக் கண்டு பெரிதும் குழம்பிப்போனான். மேலும் சீதையை அசோகவனத்தில் கணவனைப் பிரிந்து கவலையேதும் இல்லாமல் மகிழ்ச்சியாய் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டான். எனவே தான் இராவணேசுவரன் ஏதோ மாயம் செய்து சீதையின் மனநிலையை மாற்றியிருப்பதாகக் கோபம் கொண்டு ஆத்திரத்தில் அசோகவனத்தைச் சிதைத்தான். இலங்கை மாநகரையும் நெருப்பிட்டுப் பெருமளவு சிதைத்தான். இராவணனுடைய ஒரு மகனையும் கொன்றான். பிறகு சீதையைப் பார்க்க அஞ்சி நேரடியாக இராமனிடம் ஓடிச் சென்று விரைந்து இலங்கை சென்று சீதையை மீட்கா விட்டால் சீதை உனக்குக் கிடைக்காமல் போய்விடுவாள் என்று கவலையோடு கூறினான். அதன் பேரில்தான் இராமன் விரைந்து இலங்கையை நோக்கி வந்தான் என்று அசோகவனம் பற்றிய செய்தி கள் சித்தர் இராமாயணத்தில் மற்ற இராமாயணங்களில் காணப்படுவது போலில்லாமல் வேறுபட்டுப் சித்தரிக்கப்படுகிறது இவைபோன்ற செய்திகள்தான் சித்தர் இராமாயணத்தை மீண்டும் மக்களிடை யே பரப்பியேயாக வேண்டும் என்ற அக்கறையும், ஆர்வத்தையும் பிறக்கச் செய்தன.

திரிசடை தன்னுடைய பெரியப்பாவும் பெரியம்மாவும் தன்னுடைய அக்காள் சீதையின் ஞாபகமாகத்தான் தன்னைத் தத்தெடுத்துத் தங்களுடைய மகளாக வளர்த்தார்கள் என்ற உணர்வால் சீதையிடம் அளப்பரிய அன்பும் பற்றும் பாசமும் பத்தியும் கொண்டிருந்தாள். இந்த அன்புநிலை போர்க்களத்தில் மாண்டு கிடந்த தனது பெரியப்பா பெரியம்மா பிணங்களின் மீது சீதை விழுந்து புரண்டு புலம்பி அழுது அரற்றி துடியாய்த் துடித்த காட்சிகள் மென்மேலும் வளரச் செய்து விட்டன அதாவது சீதை தனது தந்தையான இராவணேசுவரனின் பிணத்தின் மீதும் தாயான வண்டமர் குழலியின் பிணத்தின் மீதும் விழுந்து புரண்டு கதறியழுத காட்சி திரிசடையையும் மற்ற அரக்க குலப் பெண்களையும் வீடணனையும் அவனோடிருந்த அரக்கர்களையும் முழுமையாகப் பாதித்தது. இந்தப் பாதிப்பால் அரக்கர் குலத்தார் அனைவருமே சீதையைத் தங்களுடைய உயிரினும் மேலாக மதித்தார்கள். விரும்பினார்கள். இன்னும் சொல்லப் போனால் சீதையே தங்களுடைய அரசியாக இலங்கை அரியாசனத்தில் அமரவேண்டும் என்று விரும்பினார்கள். சீதையைத் தங்களுடைய

தெய்வமாகவே கொண்டாடினார்கள். இதில் திரிசடை அனைவரையும் கடந்து சீதையுடனேயே என்றென்றும் இருக்க வேண்டும் என்ற வெறிநிலைக்கு வந்துவிட்டாள். ஆனால் அவளுக்குஇராமனை அறவே பிடிக்காமல் போய் விட்டது ஏனெனில் தன்னுடைய அக்காளான சீதை தன்னுடைய தந்தைக்கும் தாய்க்கும் இறுதி நெருப்பு வைத்து ஈமக்கடன்கள் ஆற்றி கண்ணீரும் கம்மலையுமாக வாய்விட்டுப் புலம்பிய படி இராமனைப் பார்க்கச் சென்ற போது இராமன் கண்மூடித்தனமாக அரக்கர் குலப்பெண்ணை தன்னால் அழைத்துச் செல்ல இயலாது என்று மறுத்து அவள் தன்னோடு வரவேண்டுமென்று நினைத்தால் நெருப்பில் மூழ்கி எழுந்து தன்னை கணவன் மேல் பத்தியுள்ளவள் என்று மெய்ப்பிக்க வேண்டும் என்று ஆணையிட்ட நிகழ்ச்சியை அவளால் மறக்கவே முடியவில்லை. அது மட்டுமல்லாமல் இராமன், தன்னுடைய அக்காளான சீதையை அரக்கர் இனத்தைச் சார்ந்தவள் என்று வெறுத்து ஒதுக்க முற்பட்ட சீதையோடு அரக்கர், இனத்தைச் சேர்ந்த தான் வருவதை இராமன் விரும்பமாட்டான்; ஒப்புக் கொள்ள மாட்டான் என்று எண்ணினாள். இது பற்றி யக்ஞவல்லி, "இராமன், சீதை அரக்கர் இனத்தின் அழிவிற்காகத் தன்னைப் பழிவாங்க நேரிடும், என்றுஅஞ்சினான்.

இராவணேசுவரனின் ஈமச்சடங்கில் சீதை வெளிப்படுத்திய தாய்ப்பாசமும் தந்தைப்பாசமும் இராமனை அவளிடத்து மிகவும் அச்சம் கொள்ளச் செய்தது. அதாவது அரக்கர் இனத்தைச் சேர்ந்த சீதை தன்னுடைய தாய் தந்தையரும் உடன் பிறந்தவர்களும் தன்னுடைய கணவனால் தான் அழிந்தார்கள் என்பதனை யெண்ணித் தன்மீது வெறுப்புணர்ச்சியும் கசப்புணர்ச்சியும் எதிர்ப்புணர்ச்சியும் கொண்டு தன்னை மனநிம்மதியேயில்லாது செய்து விடுவாளோ என்று கவலை கொண்டான் இவற்றிற்கெல்லாம் மேலாக இராவணேசுவரனின் ஈமக்கடனில் திரிசடையும் சூர்ப்பணகையும் சீதையைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுத நிகழ்ச்சி -யும், சீதையைத் தெய்வமாகவே நினைத்து அனைவரும் அவளுடைய காலிலே விழுந்து பலமுறை கும்பிட்டு அவளிடம் வாழ்த்துப் பெற்றதையும் மறக்கவே முடியவில்லை. அவனுக்குள், சீதை இலங்கைக்கு அரசியாகவே முடிசூட்டிக் கொண்டு விடுவாளோ என்ற அச்சம் குடிகொண்டு விட்டது அதற்குக் காரணம் வீடணன் சீதை தன்னுடைய அண்ணன் மகள் என்பது தெரிந்தவுடனேயே தன்னுடைய அண்ணனுடைய குடும்பத்திற்குத் தான் செய்த துரோகங்களுக்குப் பரிகாரமாக இலங்கை அரசைச் சீதையின் காலடியில் காணிக்கையாக ஆக்கவே துணிந்து விட்டான்......இவற்றால் தான் இராமன் சீதையால் தனக்கு ஆபத்து வராது என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்காகச் சீதையை மானுடர்கள் அரக்கர் குலப் பெண்ணை அரசியாக ஏற்றுக் கொள்ளத் தயங்குவார்கள் என்பதால் அவள் நெருப்பில் நீராடி மானுடப் பெண்ணின் வாழ்க்கை வாழுவதாக உறுதி கூற வேண்டு மென்று கூறினான்......" என்று சிறப்புக் குறிப்பாகப் பல இடங்களில் குறிக்கிறார். இது போல் சித்தர் இராமாயணம் எனப்படும் யக்ஞவல்லியின் குறிப்புகளில் குறிப்பிட்ட சில கருத்துக்களும் நிகழ்ச்சிகளும் அடிக்கடி திருப்பித் திருப்பிப் பல இடங்களில் குறிக்கப்படுவது மரபாக இருக்கிறது.

திரிசடை சீதையின் மறைவால் புலம்பும் புலம்பல்களிலிருந்து பல அரிய செய்திகள் வெளிப்படுகின்றன. அதாவது சீதை கருவுற்றிருக்கிறாள் என்ற செய்தி இலங்கைக்குக் கிடைத்து சீதையைக் காண திரிசடையும் சூர்ப்பணகையும் அயோத்தி வருவதற்குள் சீதை, இராமன் கட்டளையால் இலக்குவனால் வெட்டிக் கொலை செய்யப் பட்டுப் புதைக்கப்பட்டு விட்டாள் என்ற செய்தி கிடைக்கிறது இந்தச் செய்தியால் இவர்கள் இருவரும் ஏமாற்றமடையாமல் அயோத்திக்கே வந்து சீதையைப் பற்றிய செய்தியை நம்பாமல் இலக்குவனை சென்று சந்திக்கின்றனர்

(தொடரும்)

[ 7 ஆம் பக்கம் தொடர்ச்சி ]

எனவே, ஐயப்பன், ஐயனார் என்று கூறப்படும் கடவுள்களில் ஆண், பெண் என்று இருவகையினரும் உண்டு; ஏழு பருவத்தினரும் உண்டு; இல்லறம் ஏற்றவரும உண்டு; இல்லறம் ஏற்காதவரும உண்டு. இந்தப் பேருண்மைகள் புரிந்தால்; நாத்திகர், பகுத்தறிவுவாதி, இன்றைய திராவிடர் கழகத்தவர், ''சிவன், திருமால் எனும் இரண்டு ஆண்களுக்குப் பிறந்த குழந்தையே ஐயப்பன்'' -என்ற பிருமணரின் + பிறமண்ணினர் —> பிருமணர் = அன்னியர்] வேதமதமான பொய்யான ஹிந்து மதத்தின் காட்டுமிராண்டித்தனமான கற்பனைக் கதையால் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதத்துககு ஏற்பட்ட இழிவுகள், பழிகள், கேவலங்கள், அவலங்கள் .........முதலிய அனைத்தும் நீக்கப்படும், அகற்றப்படும் போக்கப்படும், தடுக்கப்படும் எனவே, ஆரிய மாயைகள், பிருமணப் பொய்கள், வட ஆரிய வேதமதக் கற்பனைகள், பிருமணரின ஹிந்து மத ஆபாசங்கள், காட்டுமிராண்டித்தனங்கள், மடமைகள், மூடத்தனங்கள்........முதலிய அனைத்தையும் அறிவியல் பூர்வமாக ஆராய்ச்சியடிப் படையில் விளக்கியுரைத்து, மெய்யான இந்து மதத்தை மறுமலர்ச்சியும், வள வளர்ச்சியும், ஆட்சிச் செழிச்சி அடையுமாறு செய்வதே இன்றைய உண்மையான மதவாதிகளின் கடமை; அருளாளர்களின் கடமை. இதைவிடுத்துச் சித்தர் நெறியினர் தமிழினத் தலைவர், இந்துமதச் சீர்திருத்தச் செம்மல் பகுத்தறிவுப் பகலவன், சிந்தனை யருவி, .........சொலலடி நாயனார் பெரியர் ஈ வெ ரா. போல் அவசரப்பட்டும் ஆத்திரப்பட்டும் செயலபட்டுப் பெரும்பாலான மதவாதிகளைப் புண்படுததி மாபெருந் தோல்வியைத் தழுவிடக் கூடாது. அதாவது, 'இந்து மதத்தின் காவலர்களும் மூலவர்களும் சொந்தக்காரர்களும் தமிழர்கள் தான்' எனற கருத்தையும; 'பிருமணர் -களும் சமசுகிருத மொழியும் தான் தமிழரை தமிழ் மொழியை, தமிழரின் இந்து மதத்தைச் சிதைத்துச் சீரழித்து நலிந்து மெலிந்து செயலிழக்கச் செய்தனர்' என்ற கருத்தையும்;........மிகமிகத் தெளிவாக விளக்கித தமிழினத்தின் மாயை, மரியாதை உரிமை, பெருமை......முதலியவைகளைக்காக்க இரவு பகலாக அஞ்சாமல் தொடர்ந்து செயல்பட்ட மாவீரரே பெரியார் ஈ வெ.ரா. ஆவார் ஆனால், அவர் பச்சையாகவும், கொச்சையாகவும், கடுமையாகவும், தீவிரமாகவும்..... தமது கருத்தை வெளியிட்டார் அதனால், அவரை நாத்திகர், கடவுள் மறுப்பாளர், மத வெறுப்பாளர்,.... என்று தவறான கருத்தோட்டத்தில் பெருப்பாலான தமிழர்களே புரிந்து, விருப்பி ஏற்றிடாமல் போய்விட்டனர். அதைப் பயனபடுத்திக் கொண்டு; பிருமணர்கள், பெரியாரின் போதனைகளையும் சாதனைகளையும் இருட்டடிப்புச் செய்திட்டனர் பெரியாரின் வாரி சாக உள்ளவர்களும பிருமணரைக் கண் மூடித்தனமாக எதிர்க்கும் காட்டுமிராண்டிச் செயலால் பெரியாரின் தோல்வியை நிலைநிறுத்தி வருகிறார்கள். இவற்றைப் புரிந்தவர்களே நாம் எனவே, நாம், நிதானமாகவும், பொறுப்பாகவும், தெளிவாக வும், அனைவரின் சிந்தையும நெஞ்சமும் பண்படுமளவுக்கு மிகுதியான சான்று -களையும் ஊனறுகளையும் வழங்கியும 'எண்ணப்புரட்சி' 'சிந்தனைப்புரட்சி' கருத்துப் புரட்சி'......முதலியவைகளை விளைவித்திடல் வேண்டும்.

இன்றைக்கு, நாட்டு நடப்பில் வளவளர்ச்சி பெற்றுச் சிறந்து விளங்கும் [கேரள நாட்டு] சபரிமலை ஐயப்பன் வழிபாடு ஒரு மாபெரும் இந்துமத விழிச்சி நிலையே! எழிச்சி நிலையே! செழிச்சி நிலையே! மலர்ச்சி நிலையே! — இதனை, ஆத்திகர் முதல் நாத்திகர் வரை உணர வேண்டும் புரிந்து விருப்பி, ஏற்கவேண்டும் இல்லாவிட்டால், ஆத்திகர் இந்து மதத்தில் குருடர்களாகவும்; நாத்திகர்கள், இந்துமதத்தில் திருடர்களாகவும் செயல்பட்டிருப்பதாக வருங்கால வரலாறு பழி கூறும்! எச்சரிக்கை!?!?!?

இன்றுள்ள ஐயப்ப பூசையில், ஒரு சில கற்பனைகள். பயனற்றவைகள். தவறுகள், குறைகள் இருக்கலாம். ஆனால், இது ஐயப்ப வழிபாட்டுத் தத்துவத்தையோ சித்தாந்தத்தையோ, வரலாற்றையோ...... கறையுடையதாக, குறையுடையதாக முறையற்றதாக. தவறுடையதாக, பயனற்றதாக, உண்மையற்ற கற்பனையுடையதாக...... எண்ணச் செய்துவிடக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! — எனவேதான். இந்துமதத் தந்தை என்ற பொறுப்பிலிருந்து ஐயப்ப பூசையின் வரலாறு, தத்துவம், சித்தாந்தம். வேதாந்தம், மறையாந்தம், முறையாந்தம், நெறியாந்தம், நாதாந்தம் போதாந்தம், ஓதாந்தம்...... முதலியவைகளை வெளியிட வந்துள்ளோம் யாம்.

பதினெண் சித்தர்கள் வகுத்தளித்த மெய்ஞ்ஞான விதிகளின்படி 'ஐயப்பன்' என்ற நிலையை அடைந்தவர்களின் சமாதுகள் உலகெங்கும் இருக்கின்றன தமிழகத்தில் பெரும்பாலான கிராமங்களில் எல்லாம் இருக்கின்றன. இவைபோன்று, சேர மன்னன் மகன் ஊழ்வினையால் ஐயப்பன் நிலைபெற்றுச் சமாது அடைந்த 'சித்தி வளாகமே' 'அருட்கோட்டமே' ...... சபரிமலை ஐயப்பன் கோயில்...... என்று சித்தர்கள் எழுதி வைத்துச் சென்றுள்ள ஏட்டுச் சுவடுகளிலிருந்து சிலவற்றை வழங்கி உள்ளோம். புரிந்து ஆராய்ந்து உணர்ந்து உலகுக்கு அறிவிப்பது உங்கள் கைகளிலே.

---



# இந்தியாவில் மார்க்சீயம் — 12

—சித்தர்

இதே ஆண்டில் (1871) செப்டம்பர் 17-23 வரை நடைபெற்ற இலண்டன் 'முதலாவது இண்டர் நேசனல்' மாநாடு மார்க்சாலும், எங்கல்சாலும் நடத்தப்பட்டது. தொழிலாளி வர்க்கம் ஒரு மாபெரும் அரசியல் போராட்டத்தின் மூலம்தான் 'பக்கூனிசுடு'களை ஒழிக்க முடியும் என்று வாதிட்டார் இது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது மட்டுமல்லாது அந்த அந்த நாடும் தத்தம் நாட்டில் சுயமான்தொரு அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் அந் நாட்டின் விடுதலைக்காமப் பாடுபட வேண்டும் என்று முன்மொழிந்து தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். 1872-ஆம் ஆண்டு மார்ச்சு 5-ஆம் தேதி இருவரும் எழுதிய இரகசிய அறிக்கை 'பக்கூனிசுடு'கள் செய்துவந்த ஏமாற்றுவித்தைகள், பிளவு வேலைகள், சதி வேலைகள்........ முதலியவைப்பற்றி வெளிப்படையாக, நேரிடையாக தாக்கி விமர்சனம் செய்தனர் 'செனரல் கவுன்சில்' 'இண்டர் நேசன'லில் கற்பனைப் பரிவுகள் என்ற அவர்களின் அறிக்கையை ஏற்றுக் கொண்டது இவரின் மூலதனம் என்ற ஒப்பற்ற நூல் இரசியாவில் அச்சேறி வெளிவந்தது. இந்நூல் அச்சாகும்போது அரசாங்கம் இந்நூல் பற்றி அசட்டையாக இருந்ததினால் இரசியாவில் வெகு விரைவில் அச்சடிக்கப்பட்டு விற்கப்பட்டது. 1872 ஏப்ரல் மாதத் துவக்கத்தில் ''தானியல்சோ'' என்பவர் இரசிய மொழிப் பதிப்பு நூல் ஒன்றை மார்க்சிடம் வழங்கினார். தொடர்ந்து 'மே' மாதம் முதல் எங்கெல்சு, 'செர்மன் சோசல் டெமக்ராடிக்கின்' ஏடான மக்கள் அரசு' என்ற வெளியீட்டுக்காக 'வீட்டுப் பிரச்சினை' என்ற தலைப்பில் தொடர்ந்து 1873 சனவரி மாதம் வரை பல கட்டுரைகளை எழுதினார். 1873 செப்டம்பர் மாதம் 'ஏக்' நகரில் நடைபெற்ற முதலாம் இண்டர்நேசனலின் ஐந்தாவது இறுதி மாநாட்டில் மார்க்சும் எங்கெல்சும கலந்து கொண்டார்கள். இதில் பயங்கரவாதிகள், அச்சுறுத்தல்வாதிகள், பயமுறுத்தல் வாதிகள்..... என்று கருதப்பட்ட 'பக்கூனிசுடுகள்' 'கில்யோம்கள்' ஆகிய இருவரையும் சங்கத்தை விட்டே வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றார்கள். —தொடரும்

# அருளுறு சத்திக் (சித்திக்) காயந்திரி மந்திரம்

ஓம் சத்தியே காத்தாயி அயனுய வித்தின் மகவே
வாலேயே! கன்னியே! குமரியே! நங்கையே தீயென மலர்ந்திடு
தீயே உன்னுேடு தூர்த்திடு பிறச்சினே யாவும்
தாயே என்னுேடு உயிரினப் பயிரினக் காப்பு வழங்கிடு

மனதின் திரத்தைச் செம்மைப் படுத்திட முதல் யுகத்துச் சித்தர்களும், பத்தியாளர்களும், சத்தியாளர்களும், சித்தியாளர்களும், முத்தியாளர் -களும். நாற்பத்தெட்டு வகை வழிபடுநிலேயினர்களும் [கடவுள்களும்] ஓதிட்ட 'மந்திரம்' [மனதின் திரம்] தான் 'காயந்திரி மந்திரம்'

'ஓம் ஞர்வ புலன்கள் சுவையாகுக
தத்துவ வித்துக்கள் அரணுகுக
பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்
தீயே யோகப் பரஞ்சோதி யாகும்''

இதே போல், முதல் யுகத்தைச் சார்ந்த மேற்படி அனேவரும் 'மனதின் தாத்தை'ச் செம்மை படுத்திட 'ஓதிட்ட மந்தரம்' [மனதின் தரம்] தான். 'காயந்திரி மந்தாம்'

இதே போல், முதல் யுகத்தைச் சார்ந்த மேற் கூறிய அனேவரும் மனதின் வலிமையைச் செம்மைப்படுத்திக் கொள்ள ஓதியது [ திறம் = வலிமை ] காயந்திரி மந்திறம்' ஆகும்.

இவையன்றி. அருளுலகச் சத்தி, சித்தி, முத்தி கடந்த பெருநிலே பெறுவதற்கு அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியான தமிழ் மொழியில் மட்டுமே உள்ள அருளுறு வாசகங்களே 'மாந்தாம்' 'மாந்தரீகம்' என்பவை மா = அளத்தற்கியலாத அளவு பெரியவை. இவை. எழுதப்படாமல் வாக்குகளாகவே உள்ளவை இவற் -றைப் பதினெண் சித்தர் பீடாதிபதி வழியாகச் செவியில் நள்ளிரவில் மெய்தோய் நிலேயில ஓதிவழங்கப்பெற்றிடலே மரபு. இவையே 'காயந்திரிமாந்தாம்' ,காயந்திரி மாந்தரீகம்'

இவை பற்றிய பேருண்மைகளேத் தெரியாத பிறமண்ணினரான பிருமணர்கள் 'காயந்திரி மந்தாம்' ஒன்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு 'காயத்திரி மந்திரம்' என்பதைப் படைத்துக் கொண்டார்கள்.

சித்தர் கைகொட்டி நாதர்
சித்தர் உருத்திரம்பிள்ளே
சித்தர் ஏளனம்பட்டியார்

KVS பிரிண்டர்ஸ், பொன்னேரி.